அசல்

27.5.38 சுத்தானந்த பாரதி

அசல்-1 நகல்-1

Swami Shuddhananda Bharati
Sri Aurobindo Ashram

AUM

2842

PONDICHERRY (S. INDIA)
27 5 38

மகாமகோபாத்யாய டாக்டர் ஸ்ரீ ஸ்வாமிநாதையர் அவர்கள் திவ்ய பாதபத்மங்களில் அன்புமலர் சூட்டி வணக்கம் செய்து அடியேன் எழுதிக்கொள்வது :-

செந்தமிழ்க் கற்பகமே, தங்கள் திருக்கடிதம் கண்டு பெருமகிழ்வெய்தினேன். தாங்கள் தமிழுலகின் மூலவிக்கிரகம். தங்கள் ஆசீர்வாதத்தால் பல தமிழ்ப்பணிகள் நிறைவேறவேண்டும். கடவுளுக்கு அன்புடன் ஒன்றை ~~நிவேதிக்கும்போது, அவர் அதை உண்ண எதிர்பார்ப்பதில்லை பக்தர்~~ ~~எழுதுக்கு~~ நிவேதிப்பதே ~~ஒரு~~ ஆத்ம திருப்தி யளிக்கிறதல்லவா ? அதுபோலே தங்கள் திருக்கரத்தில் எளியேன் எழுதிய நூல்கள் வந்தெய்திடிலே போதும். தங்கள் மாசற்ற உள்ளத்தால் ஒரு வார்த்தைகிடைத்தாற் போதும். தங்களைப்போன்ற அறிவும் அனுபவமும், அன்பும், பக்தியும் வாய்ந்த பெரியோர்கள் ஆசியிலேதான் தமிழ் நாட்டில் அரிய பெரிய காரியங்கள் சித்தியாக வேண்டும். தங்களுக்கு நேரமும், நோக்கமும் நேர்ந்தபோது இது நிவேதிக்கும் அன்புநூல்களில் குறிப்பான சிலபக்கங்கள் படித்துக்கேட்டாலே போதும். தங்களுக்குப் புதிதான விஷயம் எது இருக்கப்போகிறது ?

தங்கள் உடல் தளர்வடைந்த செய்திகேட்டுப் பெரிதும் வருந்துகின்றேன். இறைவன் தங்களுக்கு உடலுறுதியும், மனவமைதியும், நீண்ட ஆயுளும் தந்து தங்கள் சதாபிஷேகத்தைத்தமிழர் கொண்டாடும் இன்பத்தையும் அருளுக ! தாங்கள் தகுந்த ஓய்வெடுத்துக்கொள்ளவேண்டும். ஆம், திருவருள்தான் தங்கள் மூலம் இவ்வளவு அரியபெரிய தமிழ்ப்பணிகளை நிறைவேற்றியது.

யோகசித்திக்குத்தங்கள் ஆசீர்வாதம் அவசியம். அது நெடுநாட்களாக முயன்று எழுதப்பெற்றநூல். அதில் கேவலம் யோக சாதனம் மட்டுமல்ல, ~~இ~~ நாற்பொருட்களும் அடங்கியுள்ளன. அதிலுள்ள குறளடிகளை ஒருமணிநேரத்திற் படிக்கச்சொல்லிக்கேட்டாற் போதும் தங்களுக்கு விஷயம் நன்கு விளங்கும். இரண்டொருபக்கம் குறிப்பாக வியாக்கியானத்தையும் படிக்கக்கேட்டால் போதும். பத்துவரிகள் தங்கள் கைப்பட எழுதி யுதவினால் அப்படியே அவற்றை அழகாக நூல் முகப்பிற் போடலாம். சிரமத்திற்கு மன்னிக்கவேண்டும். செந்தமிழ் வளர்ச்சியென்னும் யோகம்புரிந்த தாங்கள்தான் அந்நூலுக்கு அவ்வாறு ஆசிகூறத்தகும். அதில் உள்ள குறளடிகளைத்தாங்களே நன்கு சுவைக்க வல்லீர். தங்களுக்கு யோகசித்தி அனுப்பச்சொல்லியுள்ளது. அதை மருங்காபுரி ராணியார் வெளியிடுகிறார்கள். அவர் விருப்பமும், எல்லா அன்பர் விருப்பமும் சேர்ந்தே மேற்படி வேண்டுகோளாகத் தங்கள் முன் ஸமர்ப்பிக்கப்படுகிறது. திருவருளிச்சை நடக்கட்டும்.

கலைமகளில் தாங்கள் எழுதிவரும் அனுபவக்கதைகளும், புதிய நூல்களும் இதன் உள்ளத்தைக் கவருகின்றன. தாங்கள் இவ்வாறு வெளியிடாவிட்டால் தமிழுலகிற்கு இப்பழைய வரலாறுகளெல்லாம் இறந்த செல்வமே யாகுமன்றோ !

தங்கள் தமிழ்த்தவப்பணிக்கு மீண்டும், மீண்டும், எனது நன்றியுள்ள வியப்பையும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

அன்பு, வணக்கம், அன்பு !

சுத்தானந்தபாரதி

நகல்

Swami Shuddhananda Bharati
Sri Aurobindo Ashram

Aum

Pondicherry, India
27-5-38

மகாமகோபாத்யாய டாக்டர் ஸ்ரீ சுவாமிநாதைய
ரவர்கள் திவ்யபாத பத்மங்களில் அன்புமலர் கூட்டி
வணக்கம் செய்து, ஒரு யோகி எழுதிக் கொள்வது.

சௌக்கியமிருக்க பகவே. தங்கள் திருக்கடிதங்களை
பெருமகிழ்வுடன் பெற்றேன். தாங்கள் தமிழுலகின் மூல
வாக்குகள். தங்கள் ஆசீர்வாதத்தால் பலதமிழ்ப்பணி
கள் நிறைவேற வேண்டும். கடவுளுக்கு அன்பு
டன் நன்றி செலுத்துவது ஆத்மதிருப்தியளிக்கி
றதல்லவா. அதுபோலவே தங்கள் திருக்கரத்தில்
எளியேன் எழுதிய நூல்கள் வந்தெய்தினாலே
போதும். தங்கள் பரந்த உள்ளத்தால் ஒருவாழ்த்து
கிடைத்தால் போதும். தங்களைப் போன்ற
அறிவும் அனுபவமும், அன்பும், பக்தியும் வாய்ந்த
பெரியோர்கள் ஆசியினாலேதான் தமிழ்நாட்டில்
அரிய பெரிய காரியங்கள் சித்தியாக வேண்டும்
தங்களுக்கு நேரமும் தேகமும் நேர்ந்த போது
இதனுடனனுப்பும் அன்புநூல்களில்
குறிப்பான சில பக்கங்கள் படித்துக் கேட்டா
லே போதும். தங்களுக்குப் புதிதான விஷயமாக
இருக்கப் போகிறது.

தங்கள் உடல் தளர்வடைந்த செய்தி
கேட்டுப் பெரிதும் வருந்துகின்றேன். இறைவன்
தங்களுக்கு ஆறுதலும், மனவலிமையும், நீண்ட
ஆயுளும் தந்து தங்கள் சரித்திரக் கதைத்தமி
ழர் கொண்டாடும் இன்பத்தையும் அருளுக.
தாங்கள் தகுந்த ஓய்வெடுத்துக் கொள்ள வேண்டும்
ஆம், இறைவன்தான் தங்கள் மூலம் இவ்வளவு
அரிய பெரிய தமிழ்ப்பணிகளை நிறைவேற்றியது.

யோகத்துக்குத் தங்கள் ஆசீர்வாதமவசியம்
அது. நெடுநாள் சாதனையென்று எழுதப்பெற்றது
அதில் கேவலம் யோகமுறைமட்டுமல்ல. நாற்
பொருட்களும் அடங்கியுள்ளன. அதிலுள்ள இரு
படலங்களைவேணும் நேரத்தில் படிக்கச்சொல்லிக்
கேட்டாலே போதும். தங்களுக்கு விஷயம் நன்கு
விளங்கும். இரண்டொரு பக்கங்கள் குறிப்பாக

11.209
100

வையகத்தியானத்தையும் படைக்கக் கேட்டால்
போதும் பத்துவரிகள் தாங்கள் கைப்பட எழுதியது
விளைவ் அப்படியே அவைகளை அழகாக நான்
திருப்பி போட வைத்திருப்பேன் கவிதைகளை
நம் செந்தமிழ்ச் சொற்றொடரையும் பொருட்புரிந்து
தாங்கள் தான் அவர்களுக்கு அவ்வாறு ஆசி
தரும். அந்நாளை குறைவடைந்த தாங்களை
நன்கு சீர்மை செய்வீர். தங்களுக்கு யோகத்
திறைப்பு சொல்லியுள்ளது. அந்த மேரூசாயரி
ரோணியர் வெளியிடுகிறார்கள். அவர் செய்ப்ப
குயில் என்ற அன்பர் வெளிப்படுத்து திருப்ப
ம்படி வெண்டு கோணகத் தங்கள் இலக்கப்
படைக்கப்படுகிறது. தேவ ஒன்றையும் நடக்கட்டும்
தலைகளில் தாங்களாகத் திருவருளும் அனுப்பவுக்
கதைகளும் புதியநூல்களும் தேன் உண்ணாத்
தைக்கப்படுகின்றன. தாங்கள் இவ்வாறு வெளியி
ட்டால் தமிழ் உலகிற்கு இப்பணியும் வரலாறு
காணலாம் இருந்து செல்வமே யன்றோ?
தங்கள் திருத்தொண்டுக்கு மீண்டும்
மீண்டும் நன்றியுடன் செய்கையும் வண
க்கத்தையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்

அன்பு, வணக்கம், அன்பு
சுத்தானந்தபாரதி

நகல்

7[illegible] 22

27 – 5 – 1938

சித்தானந்த பாரதி

copied 239 to 231

H209-211

168